8th November 1966]

கிறது. தொழில்களுக்குத் தேவையான அளவு, போதுமான அளவு கிடைக்கின்றனவா, பிரித்துக் கொடுக்கப்படும் மூலப் பொருள்களை வாங்குகிறவர்கள் சரியான முறையில் உபயோகிக்கிறார்களா என்று கண்காணிக்கப்படுகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம் ராஜ்யத்திலே, நம் நாட்டிலேயே, தேவையான அளவு மூலப் பொருள்கள் கிடைக்கவில்லை, என்பது எல்லோரும் அறிந்த உண்மைதான். கிடைக்கும் பொருள்களை வைத்துக்கொண்டு வினியோகம் செய்கிறோம். அசிஸ்டண்ட் டைரக்டர் ஆப் இண்டஸ்ட்ரிஸ் அடிக்கடி சென்று டெஸ்ட்-செக் செய்கிறார், கொடுத்த மூலப் பொருள்களை உபயோகிக்கிறார்களா என்று. ஆனால், அது எல்லா இடத்திலும் முடியவில்லை. ஏதாவது புகார்கள் வந்தால் விசாரிக்கிறார்கள்.

Technical education

*570 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state with reference to answer given to Question No. 165 on 10th August 1965, the reasons for the delay in starting the part-time B.E. Courses at Madras and Coimbatore?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சென்னைப் பல்கலைக் கழகத்தின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

* 508 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the proposals made by the Southern Regional Committee of the All-India Council for Technical Education at its 29th meeting on August 17, 1966 at the Madras University Buildings in regard to improving the standard of technical education in Madras; and

(*b*) the steps and measures taken in respect thereof ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No specific proposal for improving the standard of Technical Education in Madras (or any of the other three Southern States) was made by the Committee. It only offered its recommendations on certain proposals of a routine nature referred to it by the various State Governments in the southern region. A copy of the Agenda and Proceedings of the 29th meeting is kept in the Legislature Library for reference by members.

(*b*) Does not arise.

Exploration of oil

* 509 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the places in the State, where arrangements are being made for the exploration by drilling for oil by the Oil and Natural Gas Commission; and

(*b*) the manner and basis adopted for the selection of these places?

[8th November 1966

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The Oil and Natural Gas Commission has proposed to undertake drilling operation for exploration of Oil and Natural Gas in Karaikal, Shiyali, Nagapattinam, Thiruthuraipoondi and Pambari areas.

(b) These places are selected after studying carefully the available geological and geophysical data.

திரு. ஆ. கு. சுப்பையா : திருத்துறைப்பூண்டி எண்ணெய் வள ஆராய்ச்சி எந்த நிலையில் உள்ளது என்று அமைச்சர் அறிவிப்பாரா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : திருத்துறைப்பூண்டியில் ஒரு கிணறு தோண்டப்பட்டது, 1,141 மீட்டர் அளவிற்கு சென்றிருக்கிறது, அதிலிருந்து பூமிக்கு அடியில் சர்வே டேடா என்று தான் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. எண்ணெய் இருப்பதாகக் கண்டுபிடிக்க முடியவில்லை.

திரு. மா. கண்டாயுதபாணி : தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு பட்டுக்கோட்டைப் பகுதியில் எண்ணெய் ஆராய்ச்சி நடத்துவதற்கு கிணறு தோண்டப்பட்டது. தற்போது வேறு ஒரு இடத்தில், கிராமத்தில் தோண்டப்படுகிறது. எண்ணெய் கிடைக்கும் என்று கண்டுபிடித்திருக்கிறார்களா அல்லது இல்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இரண்டு முடிவுக்கும் வரவில்லை, இருக்கும் என்றோ அல்லது இல்லை என்றோ இரண்டு முடிவுக்கும் வரவில்லை. 839 மீட்டர் ஆழம் சென்றிருக்கிறது. சில டேடாக்கள் கிடைத்திருக்கின்றன. அதைக் கொண்டு ஒரு முடிவும் செய்ய முடியவில்லை.

Bus fare (refund)

* 510 Q.—SRI V. SANKARAN : Will the Minister for Industribes be pleased to state—

(a) Whether the Government are evolving any new arrangement for the quick refund of money on the cancellation of Reserved tickets by the Madras State Transport Department; and

(b) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) A proposal for making refunds of fares at the depots in the mofussil, which are under the control of Gazetted officers, is under consideration.

திரு. எம். எஸ். மணி : சார், ரெயில்வே டிக்கெட் ரிசர்வேஷன் செய்து கான்சல் செய்தால், உடனே பத்து நிமிஷத்திலே சிறிது சில்லரையைக் கழித்துக்கொண்டு பாக்கியைத் திருப்பிக் கொடுத்து விடுகிறார்கள். இங்கே ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட்டில் ஆறு மாதம் ஆனாலும் ரீபண்ட் செய்யாமல் இருக்கிறார்கள். அப்படி கான்சல்